ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர்: 4 இதழ் : 3 ஜனவரி – 2008 செய்திமலர்




**நான் உனக்குக் கேடகமும்,
உனக்கு மகா பெரிய
பலனுமாயிருக்கிறேன்...**

ஆதியாகமம் 15 : 1

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## சுதேச ஊழியர் சாட்சி – சகோ. கமலேஷ் சங்காடா



இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த ஊழியரின் பெயர் கமலேஷ் சங்காடா. குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டம் போர்பானி கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தில் பிறந்தவர். அசுத்த ஆவிகளையும், மந்திரவாதிகளையும் தெய்வமாக வணங்கி வந்தார்.

இவருடைய மூத்த சகோதரி மற்றும் சகோதரர் வியாதியினால் கஷ்டப்பட்டார்கள். பல கோயில்களுக்கு இவர்களை அழைத்துச் சென்று மந்திரங்கள் செய்தும் எந்த பலனுமில்லை. பலவிதமான மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் சகோதரனும், சகோதரியும் பிழைப்பார்களா? சாவார்களா? என்று தெரியாமல் குடும்பத்தில் உள்ள அனைவரும் கண்ணீரோடு இருந்தார்கள். அப்பொழுது ஹிரோலா கிராமத்தில் ஊழியம் செய்யும் சகோ. அணில்பாய் என்ற ஷாலோம் ஊழியரிடம் ஜெபிக்க அழைத்துச் சென்றார்கள், ஊழியர் இவருடைய குடும்பத்திலுள்ள அனைவருக்கும் இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தார். தேவன் ஜெபத்தைக் கேட்டு உடனே இவருடைய சகோதரருக்கும், சகோதரிக்கும் அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இவர்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞாயிறுதோறும் ஆலய ஆராதனைக்குச் செல்ல ஆரம்பித்தார்கள்.

பின்பு இவர் ஜெபம் மற்றும் வேத வாசிப்பின் மூலம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தார். இவருடைய சொந்த ஜனம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று இவர் தன்னை முழு நேர ஊழியத்திற்கு அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்தார். ஊழியத்தில் ஒரு மாத பயிற்சியின் போது தேவன் இவரை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிரப்பினார். இப்பொழுது இவருடைய சொந்த கிராமமாகிய போர்பானியில் ஊழியம் செய்து வருகிறார். தேவனுடைய கிருபையினால் இந்த கிராமத்தில் அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இவருக்காகவும், இவருடைய ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இவரை தாங்குபவர்: **Mr. Jebakaran** - Chennai.

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் அன்பு புத்தாண்டு வாழ்த்துக்களை உங்கள் யாவருக்கும் தெரிவிக்கிறோம்.

இப்புதிய 2008–ம் ஆண்டில் "நீ பயப்படாதே; நான் உனக்கு கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" ஆதி. 15:1–ல் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை நமக்கும் தருகிறார். புதிய ஆண்டில் தேவன் நமக்கு தந்த பீல் மக்கள் ஊழியங்களையும், உங்கள் ஊழியங்கள், சபைகள் மற்றும் உங்கள் குடும்பங்களை, நீங்கள் செய்து வரும் தொழிலையும், வேலைகளையும் தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார். ஏனெனில் அவரே நமக்கு கேடகமாக, மகா பெரிய பலனுமாயிருக்கிறார். ஆகவே 2008 ஆம் ஆண்டில் 12 மாதங்களும் எதைக் குறித்தும் பயப்படவே வேண்டாம். இம்மட்டும் உதவின எபினேசர் இம்மானுவேலராக என்றென்றும் நம்மோடிருப்பார்.

2008 ஆம் ஆண்டில் தேவனுக்கு சித்தமானால் 100 புதிய சுதேச ஊழியர்களை, 100 புதிய பணித்தளங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

- ❖ 100 புதிய சுதேச ஊழியர்கள்.
- ❖ 100 புதிய கிராம ஆலயங்கள்.
- ❖ 300 புதிய ஆதிவாசி மாணவர் பராமரிப்பு.

இவைகளை எழுப்புவதின் மூலமாகவும், மேலும் சீஷத்துவ முகாம், மூப்பர்களுக்காக முகாம், பெண்கள் எழுப்புதல் முகாம், சிறுவர் ஊழியம், சுவிஷேச பணிகளை சபைகளில் ஊக்கப்படுத்தி, சிறந்த 100 தலைவர்களை உருவாக்க தீர்மானித்துள்ளோம். 2008 ஆம் ஆண்டு முடிவதற்குள் 500 ஸ்திர சபைகளும், புதிதாக ஒரு இலட்சம் ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட ஜெபித்து செயல்பட உள்ளோம். இதற்காக ஊழியர்கள் எழுப்பப்பட, குறிப்பாக ஜெபிப்போர் மற்றும் தாங்குவோர் எழுப்பப்பட ஜெபியுங்கள். இவ்வருட ஊழியங்களை நிறைவேற்ற ரூ. 500/– மாதம் மாதம் கொடுத்து ஜெபித்து தாங்கும் 500 கிராம ஊழிய ஆதரவாளர்கள் தேவை.

உங்கள் யாவருக்காகவும் நாங்கள் தினமும் மறவாது ஜெபிக்கிறோம். முழு பீல் மக்களும் இரட்சிக்கப்பட அனுதினமும் ஜெபியுங்கள்.

### "உங்கள் யாவருக்கும் எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்"

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468

# கேடகமும், மகா பலனுமான கர்த்தர்

2008 வாக்குத்தத்த செய்தி : சகோ. V. தேவதாஸ்

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் 2008ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள். ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற சர்வ வல்லமை உள்ள தேவன் தாமே நம் அனைவரையும் 2008ஆம் ஆண்டு முழுவதும் கரம் பிடித்து நடத்துவாராக! இப்புத்தாண்டில் தேவன் நமக்கு தரும் உன்னதமான வாக்குத்தத்தம் "நீ பயப்படாதே! நான் உனக்குக் கேடகமும் உனக்கு மாக பெரிய பலனுமாயிருக்கிறேன்". ஆதி. 15:11

சர்வவல்லமையுள்ள தேவன் ஆபிராமை பெயர் சொல்– அழைத்து "உன் மூலமாக பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" என்று முழு மனுக்குலத்தை ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார். ஆனால் ஆபிராமோ தன் வாழ்வில் புத்திர சந்தானம் இல்லாதபடியாலும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்தை இன்னும் சதந்தரிக்காதபடியினாலும், ஆண்டவர் தன்னை அழைத்து வாழ்க்கை பாதையில் அநேக பாடுகளையும், பிரச்சனைகளையும் சந்திக்கிற வேளையில் சோர்ந்து போகும் பொழுதல்லாம் தேவனே தம்மை வெளிப்படுத்தி வாக்குத்தத்தங்களை தந்து பெலப்படுத்தி விசுவாசத்தை வர்த்திக்கச் செய்கிறார். அதைப் போலவே நம் வாழ்க்கைப் பாதையிலும், ஊழியப்பாதையிலும் தேவன் நம்மை ஒவ்வொரு காலகட்டங்களிலும் அழைத்து, நம்மை பெலப்படுத்தி வாக்குத்தத்தங்களைத் தருகிறார். 2008 ஆம் புதிய ஆண்டில் நாம் பிரவேசிக்கும் போது நமக்கும் தேவன் இந்த வாக்கத்தத்தத்தை தந்து ஆசீர்வதிக்கிறார். இவ் வாக்குத்தத்தத்தை தியானிக்கும்போது தேவன் மூன்று காரியங்களை நமக்கு தெளிவு படுத்துகிறார்.

1. நீ பயப்படாதே
2. நான் உனக்கு கேடகம்
3. நான் உனக்கு மகா பெரிய பலன்.

எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம். எவ்வளவு பெரிய ஆசீர்வாதங்கள். தேவன் நம்மை அழைத்தவர், உண்மையுள்ளவர். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். இவ்வாண்டின் கடைசி மட்டும் அப்படியே நடத்துவார்.

1. நீ பயப்படாதே:

இயல்பாகவே பழைய ஆண்டை முடித்து புதிய ஆண்டில் பிரவேசிக்கும்போது இந்த வருடம் எப்படியிருக்குமோ? என எதிர்பார்ப்புகள் உடைய பயம் அனைவருக்கும் உண்டு. நம்மில் பலர் கடந்த ஆண்டு எவ்வளவோ பிரச்சனைகள், தொல்லைகள், வியாதிகள், இழப்புகள், நிறைவேறாத காரியங்கள் என பலவற்றை தேவ கிருபையால் கடந்து வந்து விட்டோம். இந்த வருடம் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கட்டும் என்று ஜெபிப்பார் உண்டு. எப்படி நாம் இந்த வருடத்தை கடந்து செல்ல முடியும். 2008ல் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள், குடும்ப பொறுப்புகள், ஊழிய பொறுப்புகள், செலுத்த வேண்டிய கடன், தேவைகள், பிள்ளைகளின் காரியங்கள் என ஏராளம் உண்டல்லவா? ஆகவே தான் தேவன் முதல் நாளிலே நம்மைப் பார்த்து சொல்கிறார் நீ பயப்படாதே! வேதத்தில் சுமார் 365 தடவை தேவன் பயப்படாதே ன்ற வார்த்தையை நமக்கு எழுதி நம் பயங்களை நீக்குகிறார். ஒவ்வொரு நாளும் அவர் தரும் நல் நம்பிக்கையின் வார்த்தை நீ பயப்படாதே!

உனக்கு எதிரில் யோர்தான் நதி போன்ற பிரச்சனை வரலாம்! கோ– யாத் போன்ற சத்துரு எழும்பலாம். அக்கினி போன்ற பரிட்சைகள் வரலாம். ஆனாலும் தேவன் நம்மை பெலப்படுத்தி நீ பயப்படாதே என்று சொல்– "ஒன்றும் உன்னை சேதப்படுத்துவதில்லை"... அவைகள் உன் மீது புரளுவதுமில்லை... உன் மீது பற்றாது... நான் உன்னை தாங்குவேன்.... உன்னை சுமப்பேன்.... உன்னை தப்புவிப்பேன் என்று தேவன் வாக்கு பண்ணுகிறார். அவர் சமூகம் எப்போதும் நம்மோடு இருக்கும். உலகத்தின் கடைசி நாட்களில் நமக்கு இந்த உலகத்தில் போராட்டங்கள் உண்டு, பிரச்சனைகள் உண்டு ஆனாலும் இயேசு சொன்னார். திடன் கொள்ளுங்கள் உலகத்தை நான் ஜெயித்தேன். சீஷர்கள் பயந்தபடியால், எதிர்காலத்தைக் குறித்து, தங்கள் ஜீவனைக் குறித்து பயந்தபடியால் பூட்டிய அறையில் இருந்தார்கள். இயேசுதாமே அவர்கள் மத்தியில் வந்து "உங்களுக்கு சமாதானம்" என்று பயத்தை நீக்கி ஆசீர்வதித்தார்.

முன்னொருகாலத்தில் காடுகளில் நடந்த ராஜாங்கத்தில் ஒரு ராஜாவின் மகன் அடுத்த ராஜாவாக பட்டத்திற்கு வருவதற்கு முன்பாக தன் வா– ப பிராயத்தில் அடர்ந்தக் காட்டினை இரவில் தனிமையாக சுற்றிவரவேண்டும். அப்படியே ஒரு இளவரசன் தன் வா– ப நாட்களில் காட்டை சுற்றி வரவேண்டிய அந்தநாள் வந்தது. தகப்பனார் நன்றாக உற்சாகப்படுத்தி வழி நடத்தி நல்வார்த்தைதகளைக் கூறி தன் மகனை ஆயத்தப்படுத்தினார். அந்த இரவு முழுவதும் அடர்ந்த காடுகள், நரிகள்

ஓநாய்களின் சத்தம், மிருகங்களின் சீற்றம், விஷப்பிராணிகளின் ஓட்டம், வழி சரிவர தெரியாத நிலை, காரிருள் சூழ்ந்த நிலைமை... ஆனாலும் விடியற்காலைக்குள்ளாக முழு காட்டையும் சுற்றி வந்துவிட்டான். காலையில் அரண்மனையில் மிகுந்த சந்தோஷம். பின்னர்தான் தெரிய வந்தது. தகப்பனார் கூறினார்: மகனே உன்னை அனுப்பிவிட்டு, நீ போன எல்லா இடங்களிலும் உனக்கு பின்னாக நானே வந்து பாதுகாவலாக உனக்கு பின்னாக நின்று வழி நடத்தினேன். அதைப்போல்தான் நம் பரம தகப்பனும் நம்மை நடத்திடுவார். பயப்படாதே என்று நம் வலக்கரம் பிடித்து நடத்துகிறார்.

2. நான் உனக்கு கேடகம் :

2008ம் ஆண்டில் நாம் எதிர்நோக்கி இருக்கும் எல்லா காரியங்களிலும் அவர் நமக்கு கேடகமாயிருக்கிறார். "கேடகம்" என்பது யுத்த வீரனுக்கு எதிராக வரும் அம்புகளை தாக்காதபடி அவைகளை தடுத்து முறியடிப்பதுதான் கேடகம். தாவீதும் சங்கீத புஸ்தகங்களில் பலமுறை "கர்த்தர் என் கேடகம்" என்று பாடியுள்ளார். அவர் என் பெலனுமாயிருக்கிறார் என தாவீது கூறுகிறார். "கர்த்தர் நாமம் பலத்த துருகம்" நீதிமான் அதில் சுகமாய் தங்குவான்" என்ற வாக்கின்படி நம் வாழ்க்கையில் எதிர்நோக்கும் எல்லா பிரச்சனைகள், போராட்டங்கள், அவைகள் நேரடியாக அல்லது மறைமுகமாக வரும் பிசாசின் தந்திரங்களாக இருக்கலாம். தேவன் நம்மை கேடகம் போல் பாதுகாப்பார்.

நம்முடைய சுதேச ஊழியர் பூசன்பாய், அந்தர்வே– யா கிராமம், மத்தியபிரதேசத்தில் ஊழியம் செய்கிறார். தேவ பணியை உற்சாகமாகவும், உண்மையாகவும் நிறைவேற்றி வருகிறார். அவருடைய மகன் டேவிட் டிசம்பர் மாதம் 6ம் தேதி பள்ளி செல்ல ஜீப்பில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் ஜீப் ரோட்டில் கவிழ்ந்து உருண்டோடியது. ஆனால் தேவனோ அவனுக்கு கேடகமாக எவ்வித தீங்கும் வராதபடி காத்து எழும்பி நிற்க கிருபை தந்தார். எனக்கு பிரியமானவர்களே நம் குடும்பத்திற்கும், ஊழியத்திற்கும் அவர் கேடகமாயிருக்கிறார். அவர் செட்டைகளின் கீழ் நாம் அடைக்கலம் புகுந்தபடியால் அவர் நமக்கு கேடகமாயிருந்து அனைத்து தீங்கிற்கும் விலக்கி நமக்கு கேடகமும் பெலனுமாயிருப்பார்.

3. நான் உனக்கு மகா பெரிய பலன் :

இப்புதிய வருடத்தில் நம் பிரயாசங்களை ஆசீர்வதித்து பலன் தருகிற

தேவனாயிருக்கிறார். தேவன் ஆபிரகாமோடு இருந்தார். "கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார்." ஆதி. 24:35. அவனுடைய வேலைகளை தேவன் ஆசீர்வதித்தார். தேவன் ஈசாக்கை நோக்கி "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடே கூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார். ஆதி 26:24. நாம் கர்த்தருக்குப் பயந்து, அவர் கற்பனைகளை கைக்கொண்டு நடக்கும் போது தேவன் நமக்கு மகா பெரிய பலனாக இருக்கிறார்.

2008ஆம் ஆண்டில் நீங்கள் கையிட்டு செய்யும் வேலைகள், தொழில் மற்றும் ஊழியப்பாதையிலும் நம் அனைத்து முயற்சிகளையும் ஆசீர்வதித்து "மகா பெரிய பலனாக" நமக்கு தருவார். சேனைகளின் கர்த்தர் தாவீதுடன் இருந்து விருத்தியடைய செய்த தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். கண்ணீருடன் நீங்கள் விதைப்பவைகளை கெம்பீரமாக அறுப்பீர்கள்.

<u>நாம் செய்ய வேண்டியது என்ன?</u>

1. ஆபிரகாமைப் போல் தேவனை விசுவாசிப்போம். "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" ஆதி. 15:6

2. தேவனிடத்தில் ஆபிரகாம் ப– களை செலுத்தினான். "அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்கள் ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான். பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை" ஆதி. 15:10. நாமும் நம் வாழ்க்கையை ஜீவ ப– யாக, சுகந்த வாசனையாக அர்ப்பணிப்போம். தேவன் ஆபிரகாமின் ப– யை ஏற்று அக்கினி ஜுவாலையாக இறங்கி வந்தார். (ஆதி. 15:17) ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தார். ஆதி. (15:18). அந்த உடன்படிக்கையை வாக்குமாறாத தேவன் நிறைவேற்றினார்.

சர்வவல்லமையுள்ள தேவன் தாமே 2008ம் ஆண்டு முழுவதும் நம் அனைவரின் கேடகமாக, மகா பெரிய பலனுமாகயிருந்து வழி நடத்துவாராக! ஆமென்!

## 2007-ல்

## தேவன் செய்த மகிமையான காரியங்களில் சில...

மதுரையில் சுதேச ஊழியர்களின் பிரதிஷ்டை :–

28.01.2007 அன்று மதுரை, சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் வைத்து, ஆலயத்தின் தலைமை போதகர் Rev. V.T. ஜான்சன் அவர்கள் மூலமாக தாங்கப்பட்டு சுதேச ஊழியர் சகோ. சம்பா டாமோர் பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

புதிய கட்டிடம் :–

பிப்ரவரி 1ம் தேதி தாகோத் பணித்தளத்தில் அற்புதமான இரண்டாவது கட்டிடம் ஒன்று வாங்கி பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். ரூ. 25 இலட்சம் பெறுமான இடமும், வீடும் நமக்கு ரூ. 13 இலட்சத்திற்கு கிடைக்க தேவன் கிருபை செய்தார்.

சுதேச ஊழியர்களின் கூட்டங்கள் :–

பிப்ரவரி மாதத்தில் 5ம் தேதி முதல் 11ம் தேதி வரை சுதேச ஊழியர்கள் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். 14ம் தேதி முதல் 26ம் தேதி வரை 15 சபைகளி– ருந்து மூப்பர்கள் இணைந்து 42 இடங்களில் மூப்பர்கள் முகாம் நடத்தினார்கள்.

மார்த்தாண்டத்தில் சுதேச ஊழியர்களின் பிரதிஷ்டை :–

K.N. ராஜன் (கர்த்தர் அதிசயங்களை செய்கிறார் ஊழியம்,) அவர்கள் தாங்குவதற்கு முன்வந்த மூன்று ஷாலோம் மிஷனெரிகளுக்கும், பிப்ரவரி மாதம் 20ம் தேதி மார்த்தாண்டம், தாசையா திருமண மண்டபத்தில் மிஷனெரி பிரதிஷ்டை நடைபெற்றது.

அன்பு பகிர்வு கீதங்கள் வெளியீடு :–

மார்ச் மாதம் நமது ஊழியத்தின் சார்பில் “அன்பு பகிர்வு கீதங்கள்” Audio CD வெளியிட தேவன் கிருபை செய்தார்.

சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் கூடுகை :–

ஏப்ரல் மாதத்தில் ஜெரி, சொக்வாடா, ருண்கேடா ஆகிய மூன்று பகுதிகளிலும் நடைபெற்ற சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் கூட்டத்தில் சுமார் 250 மூப்பர்கள் பங்குபெற்று தேவனுடைய அபிஷேகத்திற்குள் நிரப்பப்பட்டார்கள். பாளையங்கோட்டையைச் சேர்ந்த Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை தந்து இந்த ஊழியங்களை நடப்பித்துத் தந்தார்கள்.

Pr. ஏசையன் அவர்களின் மிஷனெரி பயணம் :–

கடந்த ஏப்ரல் மாதம் வால்ப்பாறையைச் சேர்ந்த Pr. எசையன் அவர்கள் குழுவாக நமது ஷாலோம் ஊழியத்தின் பணித்தளத்தை பார்வையிட வந்திருந்தார். மேலும் 25.04.2007 ஆம் தேதி அவர்களுடைய இம்மானுவேல் ஜெப ஊழியத்தின்

சார்பாக புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை :—

**15.05.2007** அன்று கன்னியாகுமரி மாவட்டம் புன்னையடி C.S.I. ஆலயம் மூலமாக மூன்று சுதேச ஊழியர்கள் ஜெபித்து தாங்கப்பட்டார்கள். மதுரை பேராயர் Rt. Rev. Dr. A. கிறிஸ்டோபர் ஆசீர் அவர்கள் பிரதிஷ்டை ஆராதனையை நடத்தித் தந்தார்கள்.

நாசரேத் பங்காளர்கள் கூடுகை :—

கடந்த ஜுன் மாதம் **10**ஆம் தேதி நாசரேத் Y.M.C.A. சதுக்கத்தில் வைத்து "ஷாலோம் பங்காளர் கூடுகை" நடத்த தேவன் கிருபை செய்தார்.

மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள் :—

**15.07.2007** அன்று காருண்யா நகர் 'Voice of Herob' சபையின் போதகர் ஹென்றி ஜோசப் அவர்கள் மூலமாக மூன்றாவது மிஷனெரி பிரதிஷ்டை செய்து தாங்கப்பட்டார்.

**22.07.2007** அன்று மதுரை St. George's C.S.I. Church மூலமாக ஞாயிறு ஆராதனையில் சகோ. கல்யா சிங்காடாவுக்கான பிரதிஷ்டை ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சகோ. தேவதாஸ் அவர்கள் சிறப்பு செய்தி கொடுத்தார்கள்.

ஆரம்ப சுகாதார கல்வி அறிவு பயிற்சி முகாம் :—

ஜுலை **17**ஆம் தேதி முதல் **21**ஆம் தேதி வரை ஐந்து நாட்கள் தேவ கிருபையால் மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் வாழ்கின்ற **80** பீல் சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கு, சென்னையி– ருந்து Dr. Able மற்றும் Dr. Jolly Able அவர்கள் தலைமையில் Vellore (Rusha) வில் பணிபுரியும் Dr. Inba அவர்களும், மற்றும் அவர்களுடன் மதுரையி– ருந்து சகோதரி ரூபி, வேலூரி– ருந்து சகோதரி அன்னமுத்து அவர்களும் இணைந்து குழுவாக பணித்தளத்திற்கு வந்து ஆரம்ப சுகாதார கல்வி அறிவு பயிற்சி முகாம் நடத்தித் தந்தார்கள்.

சுதேச ஊழியர் பிரதிஷ்டை :—

**26.08.2007** அன்று மதுரை St. George's C.S.I. Church மூலமாக ஒரு சுதேச ஊழியர் பிரதிஷ்டை செய்யப்பட்டு தாங்கப்பட்டார்.

நாசரேத் கன்வென்சன் :—

தேவனுடைய கிருபையினால் நாசரேத் Y.M.C.A. ஹா– ல் ஆகஸ்ட் **24,25,26** ஆகிய தேதிகளில் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றது. சகோ. தேவதாஸ் அவர்களும், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களும் தேவ செய்தி கொடுத்தார்கள்.

புதிய சுதேச ஊழியர் பயிற்சி :—

தேவ கிருபையால் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களி– ருந்தும் **33** புதிய சுதேச ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்காக ஒப்புக் கொடுத்துள்ளார்கள். இவர்களுக்கு சிறப்பு பயிற்சி முகாம் செப்டம்பர் **1**ஆம் தேதி முதல் **29**ஆம் தேதி வரை நடத்தப்பட்டது.

மருத்துவ முகாம் :–

அக்டோபர் 1ம் தேதி முதல் 6ம் தேதி வரை மூன்று மாநிலங்களில் தாகோத், முண்டத், சொக்வாடா, ராம்புரா, சொட்டா உதய்ப்பூர் ஹிரோலா, பிஜல்பூர் ஆகிய கிராமங்களில் பீல் ஆதிவாசி ஜனங்களுக்கும், மாணவர்களுக்கும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மேலும் அக்டோபர் 8ம் தேதி முதல் 12ஆம் தேதி வரை மூத்த சுதேச ஊழியர்கள் 65 பேருக்கு ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

சுதேச ஊழியர் பிரதிஷ்டை :–

16.09.2007அன்று நாகை மாவட்டத்தில் பெராக்கா சபை மூலமாக இராஜஸ்தானைச் சேர்ந்த ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. சங்கர்லால் அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

30.09.2007 அன்று கோவையிலுள்ள அபிஷேக திருச்சபையில் வைத்து குஜராத்தைச் சேர்ந்த ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. சோமா புரியா பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

ஷாலோம் மிஷன் ஞாயிறு :–

23.09.2007, 07.10.2007, 24.10.2007 ஆகிய மூன்று தினங்களிலும் அனைத்து சபைகளிலும் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆசரிக்கப்பட்டது.

ஷாலோம் அற்புதத்தின் நாள் :–

28.09.2007 அன்று நடைபெற்ற ஷாலோம் அற்புதத்தின் நாள் அன்று அனைத்து சபைகளிலும் சுதேச ஊழியர்களை தேவன் பயன்படுத்தினார். 4125 பேருக்கு கர்த்தர் தந்த விடுதலையையும் சுகத்தையும் சாட்சியாக பகிர்ந்தார்கள்.

சுதேச ஊழியர் பிரதிஷ்டை :–

07.10.2007அன்று புதுக்கோட்டையில் உள்ள புதுக்கோட்டை ஜெப ஐக்கியத்தின் மூலமாக மத்தியபிரதேச சுதேச ஊழியர் சகோ. ஜாம்சிங் டாமோர் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

சுதேச ஊழியர்களின் குடும்ப வல்லமை முகாம் :–

நவம்பர் மாதம் 1ம் தேதி மதல் 4ம் தேதி வரை குஜராத், ஆனந்த் பட்டணத்தில் சுதேச ஊழியர்களுக்கு குடும்ப வல்லமை முகாம் நடத்தப்பட்டது, சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் குழுவாக வருகை தந்து கூட்டத்தை சிறப்பாக நடத்தித் தந்தார்கள்.

குஜராத் ஆசீர்வாதத்திற்காக சிறப்பு பிரார்த்தனை :–

நவம்பர் மாதம் 11ம் தேதி குஜராத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், குஜராத்தின் தேர்தலுக்காகவும், குஜராத் காந்திநகரில் சிறப்பு பிராத்தனை ஏறெடுக்கப்பட்டது. Dr. பால் தினகரன் அவர்கள் குடும்பமாக வந்திருந்து பிராத்தனையை சிறப்பாக நடத்தித் தந்தார்கள்

*மற்றும் பல...*

# ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர்களை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ ரூ.50,000/-கொடுத்து தேவையுள்ள இடத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்கு முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  தேவைப்படுகிறது.
- ❖ ஊழியத்திற்கு செல்ல ரூ.2,000/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** 48 சுதேச ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினை பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

## களச்செய்திகள்...

*துதியுங்கள்* *(குஜராத்)*

- கடந்தமாதம் உஸ்வானியா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 600க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 85க்கும் அதிகமான பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- கடந்த மாதம் நகரேலா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 450க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஞாயிறு பள்ளியில் 117 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- கடந்த மாதம் சொக்வாடா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 507 பேர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள்.
- கடந்த மாதம் ஜெரிகோட் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 450க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

*ஜெபியுங்கள்* *(குஜராத்)*

- டடேலா கிராமத்தில் இருக்கின்ற திருடர்கள், மந்திரவாதிகள் மற்றும் குடிகாரர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- காடோய் மற்றும் பாண்டிகேடி கிராமத்தில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபியுங்கள்.
- கேடா–டெகாரி ஆலயம் மூடப்பட்டுள்ளது, அதில் உள்ள தடைகள் நீங்க மறுபடியும் ஆலயத்தில் ஆராதனை நடைபெற ஜெபியுங்கள்.
- ராவ்ஜிபாய், அமராபாய், தாவ்ரிபேன் ஆகியோர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.

*துதியுங்கள்* *(இராஜஸ்தான்)*

- கடந்த மாதம் கும்புரா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 310 பேர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 70 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- மாண்டி சோட்டி கிராமத்தைச் சேர்ந்த டிட்டாபாய் எனற சகோதரருடைய வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெற்றது. தேவன் இவருக்கு ஒரு குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்துள்ளார்.
- வட்– பாடா கிராமத்தைச் சேர்ந்த நாத்துபாய் எனற் சகோதரர் சாராயத்திற்கு அடிமைப்பட்டிருந்தார். ஜெபத்தின் மூலம் சாராயத்தின் ஆவியி– ருந்து தேவன் விடுதலையைக் கொடுத்தார்.

- ரோகானியா கிராமத்தைச் சேர்ந்த ஏழுபேர் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள்.

*ஜெபியுங்கள்* *(இராஜஸ்தான்)*

- பிஜல்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஹிம்லா, ரமன்,மக்ளாபாய், மானஜிபாய் ஆகிய சகோதரர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

- கேட்பூர் கிராம சபை விசுவாசிகள் சகோதரி பாக– , சாரா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.
- சிமல்கேடா கிராமத்தில் மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதியை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.
- தஸ்லா கிராமத்தில் தண்ணீர் கஷ்டம் உள்ளது. இந்த கிராமத்திற்கு தண்ணீர் போதுமான அளவிற்கு கிடைப்பதற்காக ஜெபியுங்கள்.

*துதியுங்கள்* *(மத்தியபிரதேசம்)*

- கடந்த மாதம் குண்டாலா கிராம சபையில் ஞாயிறு ஆராதனையில் 95பேர் பங்கெடுத்து தேவனை ஆராதித்தார்கள்.
- கடந்த மாதம் சொக்வாடா தலையா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 635பேர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தனர். ஞாயிறு பள்ளியில் 150 பிள்ளைகள் பங்குபெற்று ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- கட்ந்த மாதம் காகாண்டுவி கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 120 பேர் பங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தூரமான இடங்களி– ருந்து மக்கள் உற்சாகமாக பங்கு பெற்றார்கள்.

*ஜெபியுங்கள்* *(மத்தியபிரதேசம்)*

- பிரகாஷ் சந்திரஹோவர் என்ற சுதேச ஊழியருடைய மகள் ரோஷினி மூன்று வயதாகியும் நடக்கவில்லை. அவள் நடக்க ஜெபியுங்கள்.
- சம்னா தாமானியா கிராம சபையில் பின்வாங்கிப்போன சபை விசுவாசிகள் மீண்டும் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.
- தேதாம் கிராமத்தைச் சேர்ந்த கித்துபேன், சகுர்பேன், வார்சிங்பாய், காளுபாய் ஆகிய மந்திரவாதிகள் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்.
- சகோ. நவல்சிங்பாய் வியாதியி– ருந்து முற்றிலுமாக விடுதலைபெற ஜெபியுங்கள்.

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. வார்சிங் பார்மார் — சிமல்யா (குஜராத்)**

பால்சிங்பாபோர் என்ற 35வயது சகோதரா் இரண்டு ஆண்டுகளாக நடக்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசித்து ஜெபித்ததில் தேவன் நடக்க பெலன் கொடுத்தார்.

**சகோ. மாசுர் கனாவா — கோலானா (குஜராத்)**

சுர்தாபேன் அமளியார் என்ற 12வயது சகோதரகனுக்கு கை–கால்களில் பக்க வாத நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தான். சபைக்கு வந்து தேவனை விசுவாசித்து ஜெபித்ததில் தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மங்கு பூரியா — பட்டன்பூரா (குஜராத்)**

பூரிபேன் என்ற 28வயது சகோதரி வயிற்றில் கட்டியினால் மூன்று வருடங்களாக கஷ்டப்பட்டாள் ரூ. 30,000/–ம் செலவு செய்து மருத்துவம் பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் சகோதரி இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது தேவன் கட்டியை மறைய செய்தார்.

**சகோ. சோமு பூரியா — உஸ்வானியா (குஜராத்)**

உச்வானியா கிராமத்தைச் சேர்ந்த கலாப்பாய் பூரியா என்ற சகோதரா் 4 வருடங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டார். ரூ. 5,000/– செலவு செய்தும் எந்தவித பயனுமில்லை. இந்நிலையில் இந்த சகோதரா் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஜெபித்தபோது தேவன் நடக்க கிருபை செய்தார்.

**சகோ. காத்து R. சாரல் — கஸ்லா (இராஜஸ்தான்)**

காந்துபாய் என்ற சகோதரருடைய மனைவி கம– பேன் பிசாசு போராட்டத்தினால் பேச முடியாமல் கஷ்டப்பட்டாள். ஜெபிக்க என்னை அழைத்தார்கள். நானும் மூப்பர் ஒருவரும் சகோதரியின் வீட்டிற்கு சென்று ஜெப எண்ணெய் பூசி ஜெபித்த போது பிசாசின் பேராட்டத்தி– ருந்து தேவன் விடுதலை கொடுத்து பேச தேவன் கிருபை செய்தார்.

**சகோ. ரூப்லால் M. பார்கி — படியாகோடார் (இராஜஸ்தான்)**

நாத்துபாய் என்ற சகோதரா் சரியாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டார். சகோதரரை ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். சகோதரருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி சபையில் உள்ள அனைவரும் சேர்ந்து அவருக்காக ஜெபித்தபோது தேவன் நடக்க கிருபை செய்தார்.

**சகோ. பாபுலால் மச்சார் — டாண்டிசோட்டி (இராஜஸ்தான்)**

குடியா கிராமத்தைச் சேர்ந்த தல்லாபேன் என்ற சகோதரி மலேரியா காய்ச்ச– னால்

மரித்துப்போகும் நிலையில் காணப்பட்டாள். மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. சகோதரியை எங்கள் வீட்டிற்கு அழைத்துவந்தார்கள். ஜெப எண்ணெய் பூசி சகோதரிக்காக ஜெபித்த போது மலேரியா காய்சச– ருந்து தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மால்சிங் கராசியா வட்டா (இராஜஸ்தான்)**

வேலாபேன் என்ற சகோதரி காக்காவ– ப்பு வியாதியினால் கஷ்டப்பட்டாள். இவள் இந்த வியாதியினால் சில நேரம் தண்ணீரிலும், சமைக்கும் போது நெருப்பிலும் விழுந்திருக்கிறாள். சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது காக்கா வ– ப்பு வியாதியி– ருந்து தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. தும்சிங் பாரியா மேந்திகேடா (மத்தியபிரதேசம்)**

நார்சிங்பாய் என்ற சகோதரருடைய மகள் சுசிலா வாந்தி, பேதியினால் கஷ்டப்பட்டாள். சிறுமியை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தும் சுகம் கிடைக்கவில்லை. வியாதி அதிகரிக்கவே சிறுமி மிகவும் மோசமான நிலைமையில் காணப்பட்டாள். வீடு சந்திப்பின் போது நான் இந்த சிறுமிக்காக ஜெபித்தபோது தேவன் வியாதியி– ருந்து சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மோகன் பூரியா சாம்நாதாமானியா (மத்தியபிரதேசம்)**

பூன்ஜிபேன் என்ற 38வயது சகோதரி காது கேட்காமலும், வாய் பேசமுடியாமலும் மிகவும் வேதனைப்பட்டாள். நம்முடைய சபையில் நடைபெற்ற ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது அற்புதமாக காது கேட்கவும், வாய்பேசவும் தேவன் கிருபை செய்தார்.

**சகோ. மத்தூர் பூரியா அந்தர்வே யா (மத்தியபிரதேசம்)**

சாமுவேல் என்ற 2வயது குழந்தை ஒரு மாதமாக நிமோனியா காய்ச்ச– னால் கஷ்டப்பட்டது. ரூ. 1000/– செலவு செய்து மருத்துவம் பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். நான் சகோதரருக்கு இயேசுவைப் பற்றி கூறி குழந்தைக்காக ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. களியா தேவ்டா தேத்தம் (மத்தியபிரதேசம்)**

தேத்தம் கிராமத்தைச் சேர்ந்த பூராபேன் என்ற சகோதரி வயிற்றில் கட்டியினாலும், எரிச்ச– னாலும் ஆறு வருடங்களாக கஷ்டப்பட்டாள். அதிக பணம் செலவு செய்தும் மருத்துவம் பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது தேவன் கட்டி மறைய கிருபை செய்தார்.

## 04.12.2007–ல் டெல்–யில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய கிறிஸ்துமஸ் விழா

04.12.2007–ல் டெல்– யில் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் தலைமையில் மௌரியா ஹோட்ட–ல் கிறிஸ்துமஸ் விழா நடத்தினார்கள். இவ்விழாவினை இன்டோ இண்டர்நேஷனல் கிறிஸ்டியன் சேம்பர் ஆப் காமர்ஸ் நிறுவனம் ஸ்பான்ஷர் செய்திருந்தது. இவ்விழாவில் மேதகு இந்திய துணை ஜனாதிபதி, மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு முதலமைச்சர், டெல்–, பல மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல பேராயர்கள், வர்த்தகர்கள் மற்றும் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி பேசியதாவது:

இங்கு அனைவரும் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்திற்கு ஒன்று கூடி இருப்பது நம் நாட்டின் கலாச்சாரத்தையும், பெருமையையும் மற்றோர்க்கு எடுத்துரைக்கும் ஒரு உரை கல்லாக திகழ்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிதாவின் மைந்தனாய் கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தில் மனிதனாய் அவதரித்தார். அவர் மக்கள் மத்தியில் அன்பு, பொறுமை, சமாதானம் இவைகளைக் குறித்து போதித்து அனைத்து தரப்பு மக்களையும் தம்பால் ஈர்த்துக் கொண்டார். கிறிஸ்தவம் என்பது நேற்றோ, இன்றோ இந்தியாவிற்கு வந்ததல்ல. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இயேசுவின் சீடராம் புனித தோமா என்பவர் இந்திய மண்ணில் கால்பதித்து கிறிஸ்துவின் அன்பை பலதரப்பட்ட மக்கள், விசேஷமாக ந– ந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போதித்து அவர்களனைவரும் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கச் செய்தார்.

இந்த இனிய நாளில் நம் நாட்டின் துணை ஜனாதிபதி திரு. முகமது ஹமீது அன்சாரி நம் மத்தியில் விருந்தினராய் கலந்து கொள்வது எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது. தமது இடைவிடா அலுவல்கள் மத்தியிலும் இவ்விழாவில் கலந்து கொள்ள நேரம் ஒதுக்கி இவ்விழாவை சிறப்பித்தமைக்கு எனது நன்றி. இன்னும் சிறிது நேரத்தில் நமது பாரத பிரதமரும் இவ்விழாவில் பங்கேற்க வருவதாக செய்தி வந்துள்ளது. இச்செய்தி எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. மத்திய அரசு சிறுபான்மையினருக்கு உற்ற உறுதுணையாக இருப்பது யாவரும் அறிந்ததே. நான் ஒரு இந்துவாக இருந்தாலும் இந்த கிறிஸ்துமஸ் விழாவின் ஓர் அங்கமாய் செயல்படுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பாராளுமன்ற உறுப்பினர்களுக்காய் நடத்தப்படும் மூன்றாவது கிறிஸ்துமஸ் விழா என்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

கிறிஸ்தவம் உலகமெங்குமுள்ள ஏழைகளையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் சென்றடைந்த ஓர் மாபெரும் மார்க்கமாகும். நம்மைப்போல் பிறரை நேசிக்கவும், ஒருவரில் ஒருவர் அன்பு கூறவும், ஒருவரை ஒருவர் மன்னிக்கவும் கிறிஸ்தவம் போதிக்கிறது. இந்த நல் போதனை அனைத்துத் தரப்பினரையும் சென்றடையவேண்டும்.

டாக்டர். ஏ.எப். பின்டோ அவர்கள் அளித்த கிறிஸ்துமஸ் செய்தியில் கிறிஸ்துமஸ் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துவின் பிறப்பு எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொண்டுவருகிறது. சிலர் கிறிஸ்துமஸை வியாபார ரீதியாக அணுகின்றனர். கிறிஸ்துமஸை ஆன்மீக நோக்கோடு பார்க்க வேண்டும். ஆண்டவர் தன்னுடைய மகனை இந்த உலகத்தில் என்னைப் போல், உங்களைப் போல் மனிதனாகப் பிறக்கச் செய்து, பின்னர் மனிதனின் பாவத்தின் நிமித்தம் சிலுவையில் அறையுண்டு, உயிர் துறக்கவும் செய்தார். நம்மில் எவரேனும் தங்களுடைய மகனை இவ்வாறு சிலுவையில் அறையுண்டு உயிர்துறக்க சம்மதிப்போமா? சுமார் 2007 ஆண்டுகளுக்கு முன்னால் கிறிஸ்துவானவர் தனது பிதாவின் சித்தப்படி இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து, சிலுவையில் தன் இரத்தத்தை சிந்தி, உலக மக்களின் பாவங்களை கழுவினார்.

கிறிஸ்துமஸ் என்றால் என்ன? கிறிஸ்துமஸ் கூறும் செய்திகள் என்ன? கிறிஸ்துவானவர் சாத்தானை அழித்து உலக மக்களுக்கு விடுதலை வழங்கினார். அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த விடுதலையை அனுபவிக்கின்றனர். கிறிஸ்துவானவர் மக்களின் பாவங்களைக் கழுவி சுத்திகரிக்க தன்னுடைய உயிரை ஈந்தார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. இதுதான் ஆண்டவர் நமக்கு கொடுத்த அன்பு என்ற பரிசு. இந்த அன்பு என்ற பரிசை நாம் எல்லோருக்கும் கொடுப்போம்.

மாண்புமிகு பிரதம மந்திரி டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் அளித்த கிறிஸ்துமஸ் செய்தியில் தற்பொழுது பாராளுமன்ற கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது. எனவே நான் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டியதாகிவிட்டது. நான் இந்த விழாவிற்கு சரியான நேரத்திற்கு வர முடியாமைக்கு மன்னிக்கவும். இதுபோன்ற கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வழக்கமாக நம்மில் பலர் பிறருடைய குற்றங்களையே காண்கின்றோம். ஆனால் இப்படிப்பட்ட கிறிஸ்துமஸ் விழாக்களில் சமாதானத்தை நாட வேண்டும். நம்முடைய நாட்டில் எத்தனையோ மொழிகள், மதங்கள் இருந்தபோதிலும், நாம் வேற்றுமையில்

ஒற்றுமையாய் இருக்கிறோம். கிறிஸ்தவ மக்கள் நம்முடைய நாட்டில் கல்வித்துறையிலும், மருத்துவத்துறையிலும் மக்களுக்கு சிறப்பான சேவை செய்துள்ளனர். மற்றவர்களுக்காக உதவி செய்வதற்காக தங்களையும் தியாகம் செய்துள்ளனர். நாட்டுக்கும் நன்மை செய்துள்ளனர். அனைவருக்கும் கிறிஸ்துமஸின் நல்வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


மேன்மை தாங்கிய துணை ஜனாதிபதி. திரு. முகமது ஹமீது அன்சாரி பேசும்போது இது ஒரு சந்தோஷமான நேரம். கிறிஸ்துமஸ் என்றாலே சந்தோஷப்படும் நாளாகும். இந்தியாவில் பலதரப்பட்ட மதங்கள், மொழிகள் இருந்தபோதிலும் மக்கள் அனைவரும் கூடி வாழ்ந்து, சந்தோஷமாக இருப்பதுதான் நமது நாட்டின் பெருமையாகும். நான் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களையும், புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அமைதி, சமாதானம் தான் கிறிஸ்துமஸின் செய்தியாகும். அன்பும், சமாதானமும் அனைவரோடும் இருக்க வேண்டும்.

பாரதிய ஜனதா கட்சியை சார்ந்த **Dr.** சங்கி– யன் அவர்கள் ஓர் கிறிஸ்துமஸ் பாடலை மிக சிறப்பாக பாடினார். மேலும் பரபல பாடகர் விஜய் பெனடிட் சிறப்பு பாடல்கள் பாடினார். பள்ளி சிறுமிகள் கிறிஸ்துமஸ் நடனங்கள் மிக சிறப்பாக இருந்தது.

மாண்புமிகு டெல்– முதலமைச்சர் திருமதி. ஷீலா தீட்சித் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டினார்.

திரு. பிரான்சிஸ், பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் நன்றியுரை கூறிய பின் பேராயர் அருட்திரு. வின்செண்ட் கான்செஸோ அவர்கள் முடிவு ஜெபத்துடன் விழா இனிதே முடிவடைந்தது. இவ்விழாவினை இன்டோ இண்டர் நேஷனர் சேம்பர் ஆப் காமர்ஸ் துணைத்தலைவர் டாக்டர். தயா தேவதாஸ், ஐ. ஜான், மறைதிரு. ஒய்.டி. ஜெயசீலன் ஆகியோர் முன் நின்று சிறப்பாக நடத்தினர்.

இவண்,
தங்கள் அன்புள்ள



(R. தனுஷ்கோடி ஆதித்தன்)
தலைவர்–விழா குழு



# ஜாண் பனியன்

மிஷனெரி முன்னோடிகள்



"மோட்சப்பிரயாணம்" என்ற நூலை எழுதிய ஜாண் பனியன், இங்கிலாந்து தேசத்தில் பெட்ஃபோர்டு நகருக்கு அருகாமையில் உள்ள எல்ட்ஸ்டவ் என்ற கிராமத்தில் கி.பி 1628 ஆம் ஆண்டு ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். இவரது தகப்பனார் தகரத் தொழில் செய்யும் ஒரு ஏழை தொழிலாளி. ஜாணுக்கு படிப்பில் நாட்டமில்லை. இவரது பெற்றோர்கள் இவருக்கு ஞான போதனைகள் அளித்த போதிலும் துஷ்டனாகவே வளர்ந்தார். இவ்விதமாக துஷ்டனாக ஜீவித்து பாவம் செய்து மன நிம்மதியை இழந்தார். இவரது நித்திரையின் போது பிசாசின் உபத்திரவங்களாலும் பயங்கரமான சொப்பனங்களாலும் அவதியுற்றார். பாவ உணர்வுகளால் உள்ளத்தில் குத்துண்டார். தான் ஏசாவைப் போல மன்னிக்கப்படக்கூடாத பாவத்தைச் செய்துள்ளதாகவும், தனக்கு இனி வாழ்க்கையே இல்லை என்பது போலவும் கனவில் உணர்த்தப்பட்டார். சங்கீதம் 77:7–9 வசனங்களின் அடிப்படையில் ஆண்டவரை நோக்கி கதறினார். அப்பொழுது "என் கிருபை உனக்கு போதும், என்னிடத்தில் வருகிறவனை நான் ஒரு போதும் புறம்பே தள்ளுவதில்லை" என்ற வார்த்தைகள் அவரது உள்ளத்தில் ஒ– க்க கேட்டார். இந்த வார்த்தைகள் அவருடைய வாழ்க்கையை மாற்றியது. அவருடைய இருதயம் சமாதானத்தினாலும் சந்தோஷத்தினாலும் நிறைந்தது.

1648 ஆம் ஆண்டு ஒரு பக்தியுள்ள குடும்பத்தின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். இவரது மூத்த மகள் எ– சபெத் பிறவியிலேயே கண் பார்வை இல்லாதிருந்தாள். இவருடைய மனைவி 1658ல் மரித்தார். பின்னர் தேவனிடம் காட்டிய இவரது அன்பு, ஜுவாலை போல் மூண்டது.

பெட்போர்டு நகரில் பிரசங்கிக்கத் துவங்கினார். இவரது பிரசங்கத்தைக் கேட்டு அநேக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். தேவன் தன்னை இவ்விதம் உபயோகிப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பாவங்களை வன்மையாகக்

கண்டித்து உபதேசம் செய்ததால் அநேகர் விரோதிகளானார்கள். இவர் ஆங்கில சபைக்கு விரோதமாக கூட்டம் நடத்துவதாகவும் பிரசங்கிப்பதாகவும் கூறி 2ம் சார்லஸ் என்பவருடைய அரசு இவரை 12 ஆண்டுகளுக்கு பெட்போர்டு சிறையிலடைத்தது. சிறையில் இவரிடம் வேதபுத்தகமும் பாக்ஸ் என்பவர் எழுதிய "இரத்த சாட்சிகளின் புஸ்தகம்" என்ற புத்தகமும் இருந்தன. சிறையில் இருக்கும்போது தான் "மோட்சப் பிரயாணம்" என்ற நூலை எழுதினார். இதுவே வேதபுத்தகத்துக்கு அடுத்ததாக அதிக மக்களால் போற்றப்படும் நூலாகும். சிறை அதிகாரிகள் இவரைப் பிரசங்கிக்கக் கூடாது என மிரட்டினார்கள். இவரே இன்று என்னை வெளியே அனுப்பினால் நாளையே இயேசுவின் அன்பைப் பிரஸ்தாபிப்பேன் என்றார். 1672 ஆம் ஆண்டில் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

1688 ஆம் ஆண்டு ஒரு வா– பன் தன்னுடைய தகப்பனாருக்கும் தனக்கும் உள்ள சண்டையில் தனக்கு உதவிட அழைத்தான், ஜாண் பனியன் அங்கு சென்று தகப்பன் மகனிடையே சமாதானம் செய்து வைத்தார். பெட்போர்டு, லண்டன் நகரங்களில் பிரசங்கித்து வந்த ஜாண் பனியன் ஜுரத்தினால் பாதிக்கப்பட்டு 1688ல் மரணமடைந்தார். இவருடைய பிரசங்கம் மிகவும் கவர்ச்சியுடையதாக இருந்த படியால் "அத்தியட்சர் பனியன்" என்று அழைக்கப்பட்டார்.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **விக்ரம் கராசியா** |
| தகப்பனார் பெயர் | : | துலா கராசியா |
| தாயார் பெயர் | : | மன்னா பேன் |
| பிறந்த நாள் | : | **20–06–1999** |
| படிக்கும் வகுப்பு | : | II Std. |
| சொந்த ஊரின் பெயர் | : | ரோகனியா |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| படிக்கும் பள்ளி | : | Shalom School, Debri. |
| தங்கி படிக்கும் விடுதி | : | Shalom Hostel, |

<u>மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–</u>

விக்ரம் கராசியாவின் தந்தை துலா கராசியா மிகவும் பின்தங்கிய பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். தேவதைகளை வணங்கி அந்தகாரத்திற்குள் வாழ்ந்து வந்தது இவருடைய குடும்பம். வியாதி ஏற்பட்டால் மந்திரவாதிகளை நாடுவது இவர்களின் வழக்கத்தி– ருந்தது. திடீரென்று இவருடைய மனைவி நோயினால் பாதிக்கப்பட்டார். நோயி– ருந்து விடுதலை பெற மந்திர பூஜைகள் செய்தும், மருத்துவமனைக்குச் சென்றும் அதிக பணம் செலவு செய்து மருத்துவம் பார்த்தும் நோயி– ருந்து குணம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இவருடைய மனைவியை கும்புரா சபைக்கு கொண்டு சென்றார். ஷாலோம் ஊழியர் இவர்களுக்காக ஜெபித்தார். தேவன் சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலமாக குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டனர். சகோ. துலா கராசியா ரோகனியா மன்னா கிராமத்தில் சபை ஊழியராக பணி செய்து வருகிறார்.

<u>திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-</u>

விக்ரம் கராசியா மிகவும் உற்சாகமான மாணவன். இவன் மிகவும் நன்றாக படிப்பான். படித்து முடித்து பெரிய ஊழியக்காரனாக ஆசைப்படுகிறார்.

<u>ஜெபியுங்கள்:-</u>

இந்தச் சிறுவனுக்கு தேவன் நல்ல ஞானத்தைக் கொடுக்கவும், எதிர்காலத்தை ஆசீர்வதிக்கவும், இவனுடைய பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

இச்சிறுவனைத் தாங்குபவர் : **Mrs. Sulchana Justin,** Tuticorin.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 61 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

# நாட்டு நடப்புச் செய்திகள்

- 2007–டிசம்பர் மாத்ததில் தமிழகம் முழுவதும் நான்கு நாட்களாக தொடர்ந்து பரவலான மழை பெய்தது. இதனால் தமிழகம் முழுவதும் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டு பல பகுதிகளில் வீடுகள் இடிந்தன. விவசாயம் பாதிக்கப்பட்டு, பயிர்கள் அனைத்தும் நாசமடைந்தன. வெள்ளத்தின் விளைவாக 27பேர் ப– யாயினர்.
- அமெரிக்கா தேடிவரும் சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தள்ளதாக பாகிஸ்தான் அதிபர் முஷரப் தெரிவித்துள்ளார். ஆனால் பின்லேடனை பிடிக்க அமெரிக்க தன்னிச்சையாக பாகிஸ்தானில் தாக்குதல் நடத்த முடியாது என்று முஷரப் தெரிவித்துள்ளார்.
- ஆப்கானிஸ்தானில் 15.12.2007 அன்று இந்திய தூதரகத்தின் மீது இரண்டு வெடிகுண்டு தாக்குதல் மர்மநபர்களால் நடத்தப்பட்டது. இதில் யாரும் காயம் அடையவில்லை என்றும் நாங்கள் நலமாக இருக்கிறோம் என்றும் இந்திய தூதர் பிரதாப்சிங் தெரிவித்தள்ளார். மேலும் தலைநகர் காபூ– ல் போலீஸ் தலைமையகத்தை குறிவைத்து தாலீபான்கள் ராக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளனர், இதில் ஐந்து பேர் ப– யானர்கள்.
- பாகிஸ்தானில் அதிபர் முஷரப் அமல்படுத்திருந்த நெருக்கடி நிலையை 15.12.2007 அன்று ரத்து செய்து பழைய சட்ட நிலையை அமல் செய்தார். முஷரப்பின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டால் மீண்டும் நெருக்கடி நிலையைக் கொண்டுவர தயங்க மாட்டார் என்று அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துளனர்.
- ரத்தத்தில் சர்க்கரை அதிக அளவில் இருப்பதால் நீரழிவு நோயினால் அவதிப்படுவோருக்கு ஒட்டகத்தின் பால் மிகச்சிறந்த மருந்து என்று ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த நீரழிவு நோய் டாக்டர் ஆர்.பி. அகர்வால் தெரிவித்துள்ளார். இவர் நடத்திய ஆராய்ச்சியில் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை ஒட்டகப்பால் பெருமளவு குறைப்பதாகக் கண்டுபிடித்துள்ளார்.
- தஞ்சையில் இருந்து இலங்கைக்கு இயந்திரப் படகுகளைக் கடத்த முயன்ற விடுதலைப்பு– களின் ஏஜெண்ட் இரண்டுபேர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டுள்ளனர். படகுகளையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். இதன் பின்னணியில் இலங்கையைச் சேர்ந்த ஜேம்ஸ் என்ற விடுதலைப்பு– தமிழகத்தில் இருந்து நீண்டநாட்களாக நடந்த கடத்தல்களுக்கு மூளையாக இருந்துளார் என்பது தெரியவந்துள்ளது.

# கேடி கிராம ஆலயம்



கேடி கிராமம் மத்திய பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டத்தில் உள்ளது. இந்த கிராமம் டவுணில் இருந்து மிகவும் உள்ளடங்கிய போக்குவரத்து வாகன வசதிகள் இல்லாத கிராமமாகும். இந்த பகுதியில் உள்ள பீல் ஆதிவாசி மக்களின் தொழில் திருடுவதாகும். பொழுதுபோக்கு சாராயம் குடிப்பதாகும். இவர்கள் இறந்தவர்களின் ஆவிகளை வணங்குகிறவர்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாத மூர்க்க குணம் கொண்ட மக்கள் இவர்கள். இவர்களில் ஒருவர்தான் சகோ. காளுபாய் குண்டியா

சகோ. காளுபாய் குண்டியா குடும்பத்தில் அனைவருக்கும் பில்– சூனிய கட்டுகளினால் பல கஷ்டங்கள். சகோதருடைய இரண்டு பிள்ளைகளும் திடீரென்று இறந்துவிட்டது. பல வழிகளில் பணம் செலவு செய்தும் குடும்பத்தில் சமாதானமில்லாமல் மிகவும் வேதனையோடு இருந்தார். இந்நேரத்தில் கோ. ஜசுபாய் என்யற சகோதருடைய வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு பாவங்களை அறிக்கை செய்து இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். சுதேச ஊழியர் சகோதரருக்காக ஜெபித்த போது தேவன் பில்– சூனிய கட்டி– ருந்து அவருக்கும், அவருடைய குடும்பத்திற்கும் விடுதலை கொடுத்தார். தனக்கும் தனது குடும்பத்திற்கும் விடுதலை கொடுத்த தேவனுக்கு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து 1998 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை மூப்பராக இருந்து ஊழியம் செய்தார். 2004 நவம்பர் மாதம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று முழுநேர ஊழியராக ஷாலோம் ஊழியத்தில் தன்னை அர்ப்பணித்தார். தற்போது இவருடைய வீட்டில் 45 குடும்பத்தினர் தேவனை ஆராதித்து வந்தனர். இடம் போதாத காரணத்தினால் ஆலயம் கட்ட தீர்மானித்தபோது, காளுபாய் தன் நிலத்தை காணிக்கையாக கொடுத்தார். அந்த இடத்தில் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டது. இந்த கிராம ஆலயம் தேவ நாம மகிமைக்காக சுமார் ரூ. 60,000/– மதிப்பில் மிகவும் சிறப்பாக கட்டப்பட்டுள்ளது.

இந்த கிராம ஆலயம் **Dr. Maria Rajamani -** Kumarapuram. அவர்கள் குடும்பத்தின் சார்பில் அளிக்கப்பட்ட நிதி உதவியில் கட்டப்பட்டது.

HAPPY NEW YEAR

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449
Postal Regn. No. TTN-07/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month



# உங்கள் யாவருக்கும்
# எங்கள் அன்பின்
# புத்தாண்டு வாழ்த்துக்கள்....

**சகோ. வே. தேவதாஸ்,**

**வஹிதா தேவதாஸ்,**

**டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா**

தலைமை அலுவலக ஊழியர்கள்
பணித்தல அலுவலக ஊழியர்கள்
அனைத்து பீல் சுதேச ஊழியர்கள்
அனைத்து பீல் விசுவாசிகள்

---

email : info@shalommission.in,
Website : www.shalommission.in

---

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss